சீரோங்கு சிதம்பரனர்

கோபால்
{சபாபதி ஐயா பற்றிய விவரம்.}

*

சிதம்பரம் - கோதை

திருமண விழா வெளியீடு

29-5-94



365



மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார்

உ

ஆனந்த நடராஜர் துணை

தில்லையான் திருக்கோயில் தனில்காண்டா
மணியமைத்துத்
திகழ்குடும்பம் பிறந்த மேலோர்

தீபஒளிக் கற்பூரம், கூத்தனுக்குச் சீர்பூநூல்
திருநீறு வழங்கி, வேதம்

வல்லவராம் அந்தணர்க்குத் தனியாக வழங்குமறை
ஒலி வேத பாட சாலை

வடிவமைத்தார் வழிவந்தோர், செட்டிகுலப்
பெண்களுக்குத்
திருப்பூட்டி வைத்த செம்மல்

எல்லோர்க்கும் நீதிசொல்லித் தீதென்றால் கண்டித்தே
ஏற்றவுரை பகரு சான்றோர்

எழில்காரைக் குடிசிறக்க முதன்முதலில் மீனாட்சி
பெயராலே விளக்குப் போட்ட

நல்லவராம் எம். எஸ். எஸ். குடும்பத்துச் சிதம்பரனார்
நாமமது நாளும் வாழ்க!

நாணயத்தின் மறுவடிவம் செந்நிறத்துச் சுந்தரனாராம்
சிதம்பரப்பேர் நாமம் வாழ்க!

காப்பியக் கவிஞர்
நா. மீனவன்

மணமக்கள்



Jc. சிதம்பரம்



கோதை

36-5

வாழ்த்துகிறேன்

காரைக்குடி நகர் செல்வர்கள் பலர் சிறப்புடன் வாழ்கின்ற திருநகர், தமிழ் விழாக்களும், இசை விழாக் களும், திருவிழாக்களும் எப்பொழுதும் நடந்து கொண் டிருக்கின்ற நகர். கோவிலூர் ஆண்டவர் பிறந்த பெரு மைமிகு நகர். ராம. சொக்கலிங்க ஐயா போன்ற பெரி யவர்கள் வாழ்ந்தநகர். சொ. முருகப்பா, தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கன், கம்பன் அடிப்பொடி சா. கணேசன் போன்ற கல்வியில் பெரியவர்கள் பெருமை சேர்த்த திருநகர். வள்ளல் அழகப்பா பல்கலைக்கழகம் வளரும் நகர்.

இத்தகு பெருமைமிகு திருநகரில் வாழ்ந்திருந்த, உயர்திரு. மெ.செ.ச.மு. சிதம்பரம் செட்டியார் அவர் களின் வாழ்க்கைக் குறிப்பை அவர்கள் குடும்பத்தினரே எழுதி இருக்கிறார்கள். அதனால் குறிப்புகள் எல்லாமே தெளிவாகவும் விபரமாகவும் எழுதப்பெற்றிருக்கிறது.

சிதம்பரம் செட்டியார் அவர்களின் வாழ்க்கையில் நான் தெரிந்து கொண்டவைகள்: ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் எலக்ட்ரிக்பவர் கார்பொரேஷனை அவர் கள் தொடங்கிச்சிரத்தையாகவும், மிகத்திறமையாகவும் நடத்தியதை அவர்கள் காலத்திலேயே பலர் நிரம்பச் சிறப்பாகப் பேசிக் கொள்ளுவார்கள். நகரத்தார்கள் குடும்பங்களில் பஞ்சாயத்து முறையில் குறைகளைத் தீர்த்துக் கொள்ளும் பழக்கம் இருந்து வந்தது. இதில் பஞ்சாயத்தார்களாக இருந்து பிணக்குகள் இருதரப்பா ரிடமும் கேட்டுநேர்மையான முடிவிற்குவந்து தீர்மானம் எழுதிக் கொடுப்பது என்ற வழக்கமும் இருந்தது. இதனைச் செட்டிநாட்டில் பல பெரியவர்கள் பெருமை யாகக் கருதி இருவரோ, மூவரோ சேர்ந்து வழக்குகளை பொறுமையாகக் கேட்டு இருதரப்பாரும் ஒப்புக்கொள்

ளக்கூடிய மாதிரியாகத் தீர்மானம் எழுதித் தருவார்கள். இந்த மாதிரி பஞ்சாயத்தார்கள் பலரில் சித. அவர் களும் ஒருவராகக் கருதப்பெற்று வந்ததை அறிவேன்.

இந்த வாழ்க்கைக் குறிப்பு நூலை, சித. அவர்களின் பேரன் சிதம்பரம் திருமண நாளில் வெளியிட்டுப் பெருமை அடைகிருர்கள் திரு. பெரியமுத்துராமன் அவர்கள்.

பெரிய முத்துராமன் அவர்கள், சின்னமுத்துராமன் அவர்கள், M. S. M. M. சொக்கலிங்கம் அவர்கள், M. S. M. M. மெய்யப்பன் அவர்கள், M. S. RM. மெய்யப்பன் அவர்கள், M,S.A.M.PL, பழநியப்பன் அவர்கள் இவர் கள் எல்லோரும் இக்குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், எனக்கு நண்பர்கள். இவர்கள் எல்லோருக்கும் என் அன்பான வாழ்த்தை அன்புடன் சொல்லுகிறேன்.

இந்த வாழ்க்கைக் குறிப்பைச் சிரத்தையுடன் படிப் பவர்கள் நகரத்தார் குடும்பம் எவ்வளவு கட்டுப்பாடாக வும், ஒருவருக்கொருவர் உதவியாகவும், நேர்மையாக வும். கண்ணியமாகவும் பெருமையாகவும் வாழ்ந்து வந் திருக்கிருர்கள் என்பதை அறிந்து கொள்ளுவார்கள். இனிமேலும் இதுபோல வாழ்ந்து வர ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசுவரர் துணை செய்வார்களாக!

இன்று மணம் பெறும், திருவளர் : சிதம்பரமும் திருவளர் : கோதையும் எல்லா நலன்களையும் நிறை வாகப் பெற்று நீண்ட நாட்களுக்கு நன்ருக வாழ்வார் களாக!

உங்கள் அன்பிற்குரிய,

ஆத்தங்குடி
24—5—94 } கா.அரு.கா. காடப்பசெட்டியார்

உ சிவமயம்

ஸ்ரீ ஆனந்த நடராஜர் துணை

மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார்

வாழ்க்கைக் குறிப்பு

நாட்டுக் கோட்டை நகரத்தார் வாழும் செட்டி நாட்டுப் பகுதியில் அருள்மிகு கொப்புடையவள் திரு அருள் பெற்றுச் சிறந்து செட்டி நாட்டின் 'இதயமெனத் திகழும் காரைக்குடியில், செழித்தோங்கும் ''செட்டியப்ப செட்டி வீடு'' என வழங்கி வந்த மெ.செ. குடும்பத்தில், மெ. செட்டியப்ப செட்டியாரின் அருந்தவப் புதல்வர்கள் மெய்யப்பசெட்டியார், சபாபதிசெட்டியார், அண்ணாமலை செட்டியார் என்ற மூவர் தில்லையம்பதியில் சபாநாயக ராக விளங்கும் நடன சபாபதி என்ற நடராஜாவுக்குப் பல கட்டளைகளும், வேதம் சாஸ்த்திரம் பயில்விக்க வேதபாடசாலையும் நிறுவுவதற்கு பொருத்தமானவர் என்றே இவர்களில் 2வது மகனுக்கு சபாபதி என்று பெயரிட்டனர் போலும். சபாபதி செட்டியார் நகரத் தாருக்குப் பொதுவான கோவிலூர் மடாலயத்தில் அதிக ஈடுபாடு கொண்டு இருந்ததுடன் அம்மடாலயத் தில் குரு பீடத்தில் வீற்றிருந்த துறவு ஆண்டவர் என்ற சிறப்புப் பெயர் பெற்ற ஞான தேசிகரிடம் வேதாந்தம், பால பாடம் முதல் வாசிஷ்டம் வரை பயின்று வேதாந்த வல்லுனராக வாழ்ந்தார்கள்.

கோவிலூர் மடாலயத்தின் தொடர்பு காரணமாக சிதம்பரம் சென்று மெ. செ. பொதுக்குடும்பத்திற்காக 1883ம் ஆண்டில் வேத சாஸ்திரங்கள் இலவசமாகப் பயில்விக்க வேதபாடசாலை நிறுவி, அதற்கான பண்டிதர்

களையும் நியமித்தார்கள். மேலும் நடராஜா கோவிலில் பிரத்தியேக கற்பூரக்கட்டளை, விபூதிக்கட்டளை, அர்த்த ஜாமக் கட்டளை போன்ற பல முக்கியக் கட்டளைகளை ஏற்படுத்தியதுடன் பல விசேஷகாலக் கட்டளைகளும் சிதம்பாம் தலத்தில் சிறப்புற்று விளங்கிய வேதாந்த மடங்களாகிய பொன்னம்பல சுவாமிகள் மடம், மௌன சுவாமிகள் மடம் ஆகியவற்றிற்கு கட்டளைகள் ஏற்படுத்தி அம்மடங்களின் நிர்வாகத்தில் பெரும் அக்கரை எடுத்துக் கவனித்து வந்தார்கள். அத்துடன் நடராஜா கோவிலுக்காக பசுமடம், நந்தவனம், முதலியன நிறுவினார்கள். நடராஜா கோவிலில் எல்லாச் சந்நிதிகளுக்கும் எல்லாக் காலங்களுக்கும் தேவையான விபூதி கற்பூரம் முழுமையும் கொடுப்பது என்பது ஒரு விசேஷமான கட்டளையாகும். இந்த மாதிரி வேறெங்கும் இல்லை.

மெ. செ. பொதுக்குடும்பப் பணத்திலிருந்து மெ. செ.மெ. கணக்காய் ரூ. 24,000மும்' மெ.செ.ச. கணக்காய் ரூ. 35,000மும், மெ. செ. அ. கணக்காய் ரூ. 21,000மும், ஆக ரூ. 80,000 இந்தத் தர்மத்துக்காக ஒதுக்கி அந்தப் பணத்திலிருந்து சிதம்பரம் பகுதியில் குமராட்சி, 2 சுப்பூர் முதலிய இடங்களில் நன்செய் நிலங்கள் வாங்கி இந்தத் தருமங்கள் செவ்வனே தொன்றுதொட்டு நடைபெற ஏற்பாடு செய்தார்கள்.

அத்துடன் கோவில் பூஜாகாலங்களில் ஒலிப்பதற்காக, பெரிய ''காண்டாமணி'' ஒன்றை நாகப்பட்டிணத்தில் இருந்த ரெயில்வே ஒர்க்ஷாப்பில் வார்த்து 1884ம் வருடம் தில்லை நடராஜர் ஆலயத்தில் பொருத்தினார்கள். இந்தக் ''காண்டாமணி'' இன்று வரை சிதம்பரத்தில் ஒலித்துக் கொண்டு வருகிறது.

இத்தகைய தருமங்களை ஏற்படுத்தி, நன்கு நடைபெறுவதைப் பார்த்த மனநிறைவோடு 22—6—1896ல் துன்முகி வருஷம் ஆனி மீ" 10உ விசாக நட்சத்திரத்தில் சபாபதி ஐயா அவர்கள் விவேகமுக்தி அடைந்தார்கள்.

சபாபதி ஐயா அவர்களை, அவர்கள் இறுதிக் காலத்தில் ஆபத் சந்நியாசம் வாங்கியிருந்தபடியால் கோவிலூர் மடாலயத்தைச் சார்ந்த தென்னந்தோப்பில், அடியார்கள் சமாது இருக்கும் இடத்தில் சமாதுவைத்து அன்று முதல், ஆண்டுதோறும் ஆனிமாதம் விசாக நக்ஷத்திரத்தன்று சபாபதி ஐயாவின் வாரிசுதாரர்கள் குருபூஜை நடத்தி, கோவிலூர் மடாலயத்திலுள்ள சாதுக்களுக்கு மஹேஸ்வரபூஜையும் ஆண்டவர் வழிபாடும் நடத்தி வருகிறார்கள்.

சபாபதி செட்டியார் மகன் முத்துராமன் செட்டியார் :-

சபாபதி செட்டியாருக்கு முதல் மனைவி மூலம் முத்துராமன் செட்டியார் என்று ஒரு ஆண்மகனும் 2வது மனைவி மூலம் 2 பெண்களும் பிறந்தார்கள். முத்துராமன் செட்டியார் ரொம்பவும் தெய்வ பக்தியுடையவர்கள். அவர்கள் காலையில் சிவதரிசனம் செய்யாமல் உணவு அருந்துவதில்லை. அவர்கள் கோனாபட்டுக்கு தம்மாமனார் வீட்டுக்குப் போகும் சமயங்களில் கோனாபட்டில் சிவன் கோவில் இல்லாததால் அங்கிருந்து ஆத்தங்குடிக்குக் கால்நடையாகச் சென்று சிவவழிபாடு செய்து வந்த பிறகுதான் உணவு அருந்துவார்களாம். கோனாபட்டில் சிவன்கோவில் கட்டியதற்கு இதையும் ஒரு காரணமாகக் கூறுவார்கள்.

தேவகோட்டை நீதிமன்றத்தில் நடைபெற்ற ஒரு வழக்கின் தீர்ப்பில் முத்துராமன் செட்டியாரை ''தரும ராஜா'' என்றுகுறிப்பிட்டிருக்கிறார்கள்.

அவர்கள் காலத்திலேயே அன்னாரின் மூத்தமகன் சிதம்பரம் செட்டியார் எல்லா அலுவல்களையும் தகப்பனாருக்கு உறுதுணையாக இருந்து பொறுப்பாகக் கவனித்து வந்தார்கள்.

முத்துராமன் செட்டியார் காலத்தில்தான் செட்டி நாட்டுப் பகுதிக்கு, மோட்டார் வாகனங்கள் வரத் தொடங்கியது. அந்தக் காலத்தில் காரைக்குடியில் மோட்டார் வாகனங்கள் வாங்கிய ஒரு சில குடும்பங் களில் இவர்களும் ஒருவர். முத்துராமன் செட்டியார் ஆங்கிலப் பயிற்சி இல்லாமையால் 'கார்' என்று சொல் லாமல் அந்த 'அதை' எடுத்துவரச் சொல்லுங்கள் என்று சொல்வார்களாம்.

முத்துராமன் செட்டியார் சஷ்டியப்தபூர்த்தி செய்து கொண்டு சிலகாலம் இருந்து 7-12—1917ல் பிங்கள ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21ம் நாள் வைக்கத்து அஷ்டமி அன்று சிவபதவி அடைந்தார்கள்.

முத்துராமன் செட்டியாரின் வாரிசுகள் :

முத்துராமன் செட்டியாருக்கு, சிதம்பரம் செட்டி யார், மெய்யப்ப செட்டியரார் என்ற 2 மகன்களும் முத்தாள், சிவகாமி, அலமேலு என்ற 3 மகள்களும் பிறந்தார்கள். மூத்தமகள் முத்தாளை, கானாடுகாத் தான் சா. ராம. அரு. வீரப்ப செட்டியாருக்கு பால்ய விவாஹம் செய்து வைத்தார்கள். வீரப்ப செட்டி யார் இளம் வயதிலேயே இறந்து விட்டபடியால், முத்தாள் கைம்பெண்ணாகிவிட்டாள். அதனால் அவளைத் தாய்வீட்டில் கூட்டிவந்து வைத்துக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது.

பிறகு அந்த நிலையில் அவளை 'சிதம்பரத்தில் தக்க பாதுகாப்புடன் இருக்கச் செய்தார்கள். சிதம்பரத்தில் தங்கி இருந்ததால், அவளுக்கு தெய்வபக்தியும், தீட் சதர் குடும்பங்களுடன் ஈடுபாடும் ஏற்பட்டது. அவள், சிதம்பரத்தில் நடந்து வந்த தருமங்களையும் ஈடுபாடு டன் கவனித்து வந்தாள்.

2வது மகளாகிய சிவகாமி ஆச்சியை, காரைக்குடி கொப்புடையம்மன் கோவில் பரம்பரை டிரஸ்டி குடும்பத்தைச் சேர்ந்த அரு. ராம. அரு. அருணாசலம் செட்டியாருக்கும், 3வது மகளான அலமேலு ஆச்சியை, கொழும்பு தொடர்புள்ள, மெ. ப. சு. பழநியப்ப செட்டியாருக்கும் திருமணம் செய்து வைத்தார்கள்.

முத்துராமன் செட்டியாரின் மூத்தமகன் பெயர்

சிதம்பரம் செட்டியார் :

அவர்கள் (1887ல்) சர்வஜித்து வருஷம் கார்த்திகை மாதம் 20வ பிறந்தார்கள். காரைக்குடி நகரச் சிவன் கோவில் ராஜகோபுரத் திருப்பணி செய்த ஆத. ராம. ராமசாமிசெட்டியாரின் மகள் அலமேலுவை அவருக்கு விவாகம் செய்து வைத்தார்கள்.

முத்துராமன் செட்டியாரின் இளைய மகன் மெய்யப்ப செட்டியாருக்கு, கோனபட்டில் சொக்கப்ப ஐயா வீடு என்ற பிரபலமான குடும்பத்தில் ராம.சு.லெ. லெட்சுமணன் செட்டியார் மகள் பார்வதியைத் திருமணம் செய்து வைத்தார்கள்.

மெ. செ, ச. சிதம்பரம் செட்டியார்

சிதம்பரம் செட்டியார் அந்தக்கால முறைப்படி திண்ணைப் பள்ளிக்கூடம் என்று சொல்லப்பட்ட திறமை மிக்க வாத்தியார்களால் நடத்தப்பட்டுவந்த பள்ளிகளில், நல்ல முறையில் பயின்று இளம் வயதிலேயே கல்வி கேள்விகளில் சிறந்து, கணக்குகள் பார்ப்பதிலும் திறமையாக விளங்கி, சிறந்த ஞானமும் அறிவும் பெற்றுத் திகழ்ந்தார்கள். மேலும் அந்தக் கால முறைப்படி 'எண்சுவடி வாய்ப்பாடு' போன்றவைகளைப் பயின்று மனத்திலேயே எல்லாக் கணக்கும் போட்டுவிடும் சாதுர்யமும் உடையவர்கள்,

அவர்களும், மெ. செ. மெ. மெ. குடும்பத்தில் பிறந்த சின்னச் சொக்கலிங்கம்செட்டியாரும், மெ. செ. மெ. செ. பெரிய சொக்கலிங்கம் செட்டியாரும் கிட்டத் தட்ட ஒத்த வயதினர். மூவரும் எல்லா நடப்புகளிலும் ஒருவருக்கொருவர் கலந்துபேசி, ஆராய்ந்து ஒத்த மன நிலேயில் குடும்ப அலுவல்களேயும், பொது அலுவல் களேயும், திறமையுடனும், குடும்பத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையிலும் எல்லாவற்றையும் கவனித்து வந்தார்கள்,

சின்னச் சொக்கலிங்கம் செட்டியார், நோய்வாய்ப் பட்டு, நடுவயதில், 14—5—1925ல் திடீர் மரணம் அடைந்துவிட்டார்கள். பெரியசொக்கலிங்கம் செட்டி யாருக்கும், முதுகில் ராஜபிளவை புறப்பட்டு, மதுரை யில் பிரபல டாக்டர் ரெங்காச்சாரி ஆப்பரேஷன் செய் ததில் குணமாகாமல் 1928ல் காலமாகி விட்டார்கள்.

அதனுல் மெ. செ. குடும்பப் பொது விஷயங்கள், கிராமங்கள், தர்மங்கள் மற்றும் பொதுத் துடர்புகள் எல்லாவற்றையும் சிதம்பரம் செட்டியார் பார்க்க வேண் டிய பொறுப்பு வந்து விட்டதால், அத்துணே பொறுப்புக் களேயும் ஏற்று திறமையாகக் கவனித்து வந்தார்கள்.

அத்துடன் பங்காளிகள், தாயபிள்ளேகள், நண்பர் கள் வீடுகளில் ஏற்பட்ட குடும்ப விவகாரங்கள், கல்யாணம், சுவீகாரம் போன்ற நன்மைதீமைகள் எல்லாவற்றிலும் பெரும் பொறுப்பேற்று, அவைகள் நல்லவிதமாக நடக்க உதவினுர்கள். அவர்களின் வார்த் தைக்கு பொதுவாகவே செட்டிநாட்டுப் பகுதியில் எல்லோரும் மதிப்புக் கொடுத்து, நடந்துவந்தார்கள்.

மேலும், அவர்கள் மெ. செ. குடும்பத்தில், ''ச'' பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதால் பொதுவாக அவர் களே ''ச'' என்றே அழைத்தார்கள்,

இவர்களுடைய முயற்சியால், செயல்களால், பல குடும்பங்கள் சிறப்படைந்தன என்பதில் ஐயமில்லை

மெ. செ. மெ. மெ. குடும்பத்தில், சின்ன சொக்கலிங்கம் செட்டியார் திடீர் மறைவுக்குப் பின், பெரிய சொக்கலிங்கம் செட்டியாருடன் சேர்ந்து திரு மெய்யப்ப செட்டியாரை சுவீகாரம் செய்து திருமணமும் செய்து வைத்தார்கள். மேலும் மலேயா சட்டப்படி, மலேயாவில் 'கோசா' எடுக்க வேண்டியதிருந்ததால், அதற்கான முயற்சிகளை எடுத்து மலேயா அரசாங்கத்துச் சட்டப்படியும், அவர்கள் கோரியபடியும், பொறுப்பு (Guarantee) எழுதிக்கொடுத்து, 'கோசா' நடவடிக்கைகளை (Death duty proceedings) பூர்த்தி செய்தார்கள். அதன் பின்னும் மேற்படி குடும்பத்தைச் சேர்ந்த தொலைக்கடைகள், தொழில்கள், சொத்துக்கள், தருமங்கள், குடும்ப விஷயங்கள் யாவற்றையும் செவ்வனே நிர்வகித்து, மெய்யப்ப செட்டியாரிடம் அவர் பெரியவரானவுடன் ஒப்புவித்தார்கள்.

சு.ராம.ராம. குடும்பத்திற்கும் அவசரமாக சுவீகாரம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டபோது, சகலபொறுப்புகளையும் சிதம்பரம் செட்டியாரே ஏற்று ஷண்முகநாதபுரத்திலிருந்து, திரு. கிருஷ்ணன் செட்டியாரை சுவீகாரம் செய்து, அவருக்குத் திருமணமும் செய்து வைத்ததுடன், அந்த "எஸ்டேட்" பொறுப்புக்கள் எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு கவனித்து வந்தார்கள், மேற்படி கிருஷ்ணப்ப செட்டியாரும், தங்கள் குடும்பத்துக்கு விளக்கேற்றி வைத்ததின் நினைவாக, சிதம்பரம் செட்டியாரின் திருவுருவப்படம் ஒன்றை! அவர்கள் வீட்டில் வைத்து வணங்கி வருகிறார்கள்.

கானாடுகாத்தானில், சிதம்பரம் செட்டியாருடைய சகோதரி, சா. ராம. அரு. வீர. வீரப்ப செட்டியார் முத்தாள் ஆச்சி குடும்பத்திற்கு, திரு. நடேசன் செட்டி

யாரை சுவீகாரம் செய்து, அவருக்குத் திருமணமும் செய்வித்துப் பிறகு, அந்தக் குடும்பத்திற்குக் கிடைக்க வேண்டிய பங்கு பாகத்தைப்பெற, பெரும் முயற்சியும் சட்ட நடவடிக்கைகளும் எடுத்து வாங்கிக் கொடுத்த துடன். அந்தக் குடும்பத்திற்கு விளக்கு எற்றிவைத்த பெருமையும் சிதம்பரம் செட்டியாரையே சாரும்.

சிதம்பரம் செட்டியாருடைய பொதுப்பணிகள் :

அந்தக் காலத்தில் காரைக்குடிக்கு, மின் வசதி ஏற்படுத்த அரசாங்க Electrical Inspector முதலிய அதிகாரிகளை சென்னைக்கும் ஊட்டிக்கும்சென்று, கண்டு பேசி, ''ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் எலக்ட்ரிக் பவர் கார்ப்பொரேஷன் லிமிடெட்'' என்ற பெயருடன் ஒரு பொது நிறுவனம் துவங்கி, அதற்கு வேண்டிய மூல தனத்துக்கு பங்குகளைச் சேர்த்ததுடன், அக்காலத்தின் பிரபலமான Seshasayee Brothers Ltd., (Consulting Engineers) களாக எலக்ட்ரிகல் இன்ஜினியர்களை நிய மனம் செய்து, கழனி வாசலில் இடம் வாங்கி, கட்டிடம் கட்டி, மின்சார இன்ஜின்களை வெளிநாட்டிலிருந்து வர வழைத்து, அவைகளைப் பொறுத்தி, Dr. P. சுப்ப ராயனைக் கொண்டு கட்டிடத்தைத் திறந்து வைத்து, மின் உற்பத்தியை திருமதி. ராதாபாய் சுப்பராயனைக் கொண்டு துவக்கி வைத்தார்கள்.

சிதம்பரம் செட்டியார் இந்நிறுவனத்தின் அலுவல் கள் ஒவ்வொன்றையும் தமது நேர்முகப் பார்வையில் கவனித்துத் திறமையாக நிர்வகித்து!, குறைந்த கட்ட ணத்தில் மின்சாரம் வினியோகித்து, நிறுவனத்திற்கு நல்ல லாபம் கிடைத்ததுடன், பங்கு தாரர்களுக்கு ''போனஸ் பங்கும்'' நல்ல லாபத்துகையும் கிடைக்கச் செய்தார்கள்.

மேற்படி கம்பெனி 'ஷேர்'கள் நல்லவிலைக்கு 'மார்க்கட்டில்' விற்கப்பட்டன.

கம்பெனியில் இருந்து எந்த ஊதியமும் பெருமல், தனக்கென்று எவ்வித வசதியும் செய்து கொள்ளாமல், தனது சொந்தச் செலவில் தன் காருக்குப் பெட்ரோல் போட்டுக் கொண்டு, மாலே நேரம் பெரும்பகுதி கார்ப் பொரேஷன் அலுவலகத்திற்குச் சென்று ஒவ்வொரு விஷயத்தையும் நேரடியாகக் கவனித்தார்கள். ஒவ் வொரு மாதமும் 15உக்குள், அதற்கு முன்மாத மின் கட்டணத்தைச் செலுத்திஞல், அதற்கு 10% தள்ளுபடி என்று ஒரு சலுகை செய்ததில் பில்துகைகள் சுலபமாக வும், வேகமாகவும் வசூலாகின.

செட்டிநாட்டுப் பகுதியில், முன்பு இருந்த மின் சப்ளே நிறுவனங்களில் இதுதான் சிறப்பாகவும், லாப கரமாகவும் நடைபெற்றது. இதற்குப் புது அலுவலகக் கட்டிடம் ஒன்றைக் கட்டி, செட்டிநாட்டு அரசர் திரு. மு. அ. அண்ணுமலே செட்டியாரவர்கள் 14-6-1934ல் திறந்து வைத்து, திரு. சிதம்பரம் செட்டியாரின் முழு உருவப் படத்தையும் ராஜாசர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அந்தவிழாவில் பல அறிஞர் கள் கலந்து கொண்டு, சிதம்பரம் செட்டியாரின்திறமை ஈடுபாடு நிர்வாகம் பற்றிச் சிறப்பாகப் பாரட்டிப் பேசினுர்கள்.

ஸ்ரீ மீனுக்ஷி சுந்தரேஸ்வரர் எலக்ட்ரிக் பவர் கார் பொரேஷனே, அவர்கள் துவங்கியது முதல் அவர்களது இறுதிக் காலம் வரை, அவர்களே தொடர்ந்து ''மானேஜிங்டைரக்டராக'' இருந்து வந்தார்கள். ஏற் கனவே குறிப்பிட்டது போல் எவ்வித ஊதியமோ, போனஸோ, இதர சலுகைகளோ, பெற்றுக்கொள்ள வில்லே என்பது குறிப்பிடத் தக்கது.

சிதம்பரம் செட்டியாரின் மற்ற தொண்டுகள் :

1 இளையாற்றங்குடிக் கோவில் ஒக்கூர் பிரிவு டிரஸ்ட்டியாகப் பலகாலம் இருந்து வந்திருக்கிறார்கள்.

2 பிரான்மலை, குன்றக்குடி வகையரு 5 கோவில்கள் தேவஸ்த்தான' சூப்ரவிஷன் போர்டின்' மானேஜிங் மெம்பராக 2 'டெர்ம்' இருந்தார்கள். அவர்களுடன், கூடப் பதவி வகித்தவர்கள் S. M. AR. நாராயணன் செட்டியாரும், MR. S. ரெத்தின வேலுச்சாமி செட்டியாரும் ஆவார்கள்.

3 முனிசிபல் கௌன்சிலர் பதவி—எலக்ட்ரிக் கார்ப்பொரேஷனுடன் முனிசிபாலிட்டி எக்ரிமெண்ட் செய்து கொள்ள வேண்டியதுவந்ததால், இருபதவியிலும் ஒருவரே இருக்கக் கூடாது என்ற நிலை ஏற்பட்டதால், கௌன்சிலர் பதவியை ராஜினமா செய்தார்கள்.

4 Honrary Bench Magistrate பதவி: அந்தக் காலத்தில், சிறு வழக்குகளை விசாரணை' செய்து தீர்ப்பு வழங்குவதற்காக, உள்ளூரில் உள்ள பிரமுகர்களைக் கொண்டு ''பெஞ்ச் கோர்ட்'' என்ற பெயரில் ஒரு நீதிமன்றம் அமைத்து, அதற்கு ''மாஜிஸ்ட்ரேட்''களை அந்த மாவட்டக் கலெக்டர் நியமிப்பது வழக்கம். அந்த நீதிமன்றத்தில் (Court) இவர்கள் பலகாலம் பதவி வகித்தார்கள்.

5 ''காரைக்குடி, ஸ்ரீ மீனுக்ஷிசுந்தரேஸ்வரர் வித்யாசாலா என்ற பெயருடன் ஆங்கிலம் பயிற்றுவிக்க ஆரம்பித்த பள்ளியில், துவக்கத்திலிருந்து ஈடுபாடு கொண்டு, தாளாளராகவும், தலைவராகவும் பல காலம் சிறப்புறப் பணியாற்றியிருக்கிறுர்கள்.

6 ''காரைக்குடி ரீடிங்ரூம் அண்டு யூனியன் கிளப்'' என்ற பெயரில் ஒரு ஸ்தாபனத்தை சக நண்பர் களுடன் 1921ம் ஆண்டில் ஆரம்பித்து அதில் ஆயுள் சந்தாதாரர் ஆகியதுடன் அதில் பல பொறுப்புக் களையும் வகித்தார்கள்.

7 ''காரைக்குடி Co-operative Stores'' என்ற நிறு வனத்தை உருவாக்கி, சிதம்பரம் செட்டியார் அவர்கள் தலைவராகவும், Dr. S. சுப்பிரமணியஐயர் காரியதரிசியாகவும் இருந்து பலகாலம் நிர்வகித்து வந்தார்கள்.

8 காரைக்குடி, ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயம். (நகரச் சிவன்கோவில்) ஆத. பள. சிதம்பரம் செட்டியாருடைய நிர்வாகத்தில் இருந்த போது, அதுசமயம் நிர்வாகத்துக்கு 'டிரஸ்டு போர்டு' நியமிக்கும்படி, இந்துமத அறநிலைய ஆணையகம் தலையிட்டதால், காரைக்குடி நகரத்தார்கள் கூடி டிரஸ்ட்டிகள்42பேர் கொண்ட ஒரு'டிரஸ்ட் போர்டு' நியமித்து, அந்த டிரஸ்ட்டிகளில் 3 பேர் சேர்ந்து, ஒவ்வொரு வருஷமும் ஆலயத்தை நிர்வகிப்பது என்று 14 ஆண்டுகளுக்கு 'டர்ன்' மானேஜ்மெண்ட் ஏற்படுத்துவதற்கு, திருவுளச் சீட்டுப் போட்டுப் பார்த்ததில், சிதம்பரம் செட்டியார் பெயர் முதன் முதலாக வந்தது. அதன்படி, அவர்கள் நகரச் சிவன் கோவிலின் 'முதல் நியமன மானேஜிங் டிரஸ்ட்டி'யாகி, கோவிலை திறம்பட நிர்வகித்து வந்தார்கள். அக்காலத்தில், சிவன் கோவிலுக்கு வருமானம் ரொம்பக் குறைவு. உபயதாரர்களும் குறைவு. நடப்பு உள்துறைச் செலவுகள் அதிகம். அப்போது கைப்பணம் போட்டு நிர்வாகம் பார்க்க வேண்டிய நிலை. அந்தச் சமயம், தேவையுள்ள பணத்தை, அவ்வப்போது கையிலிருந்து போட்டு நிர்வாகம் செய்தார்கள். அவர்களுடன் திரு.

முரு, நா. சித. சிதம்பரம் செட்டியாரும், ''கருத் தான் செட்டியார் வீட்டு'' நா. ராம.. ராமசாமி செட்டியாரும் டிரஸ்டிகளாக இருந்தார்கள்.

9 காசி நகரச் சத்திர நிர்வாகம் ரெங்கூன் நகரத் தார்களால் யுத்த காலத்துக்கு முன்பு, கவனிக்கப் பட்டு வந்தது. 2வது உலக யுத்தம் தொடங்கி, அது பர்மாவுக்குப் பரவி பர்மா, ஜப்பானியர் வசம் ஆனவுடன், காசி நாட்டுக்கோட்னட நகரச் சத்தி ரத்தை நிர்வகிப்பதற்காக, கோவிலூரில் நகரக் கூட்டம் போட்டு அதில், தேவகோட்டை, அழ. சுப. பழ. சுப்பிரமணியன் செட்டியாரைத் தலைவ ராகவும். மெ.செ.ச. சிதம்பரம் செட்டியாரை காரிய தரிசியாகவும் நியமித்தார்கள். காரியதரிசி என்ற முறையில் சிதம்பரம் செட்டியார் நிர்வாகத்தைக் கவனித்து வந்ததுடன் அதற்குப் பற்ருக்குறை ஏற் பட்டபோது, நன்கொடைகள் வசூலித்து ஸ்ரீ காசிக்கு அனுப்பியும் கவனித்தார்கள் நடைமுறை யில் நிர்வாகத்தில் பல பிரச்னைகள் இருந்தன. அவைகளையும் சமாளித்தார்கள். பர்மாவில் யுத்தம் முடிந்து இந்தியாவுக்கு போக்கு வரத்து ஏற்பட்ட தும், ரெங்கூன் நகரத்தார்களால் ஸ்ரீ காசிநகரச் சத்திர நிர்வாகத்தைக் கவனிக்க விரும்பியதால் அவர்களிடம் நிர்வாகத்தைக் மீண்டும் ஒப்படைத்த துடன் அதன் நிர்வாக சம்பந்தமான ரிக்கார்டுகள் கணக்குகளையும் ஒப்புவித்து விட்டார்கள்.

10 2வது யுத்தம் முடிந்தபோது நகரத்தார்களுக்கு 'இன்கம்டாக்ஸ்' சில பல இன்னல்கள் ஏற்பட்டன. இது சம்பந்தமாக நகரத்தார்கள் கூடிக்கலந்து, ஆலோசித்து ஒரு குழு நியமனம் செய்தார்கள். அதன் பொக்கிஷதாரர் மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார் ஆவார்கள். இந்தக்குழு நியூடில்லி சென்று, அங்கு ராஜாஜியின் உதவியோடு,

J. புலபாய் தேசாய் (Bhulabai Desai) என்ற பிரபல காங்கிரஸ்காரரை, நகரத்தார்களின் குறைகளை எடுத்துச் சொல்ல நியமனம் செய்து, அன்றைய வைஸ்ராய் நிர்வாஹக் குழுவில் நிதி இலாகா மெம்பராக இருந்த J. ரெய்ஸ்மெனைச் (Raismen) சந்தித்துப் பேசி, சில சலுகைகளைப் பெற்று வந்தார்கள். அதில் முக்கியமானது, ஏற்கனவே ஜப்பான் யுத்த காலத்திற்கு முன்பு லாபம்ஏற்பட்டு, அந்த லாபத்துக்குவரிக்கட்டாதிருந்தால், ஜப்பான் காலத்தில், அவர்களுக்கு ஏற்பட்ட நஷ்டங்களை, அந்த லாபத்தில் ஈடுகட்டலாம். முன்பு கிடைத்த லாபத்துக்கு வரிக்கட்ட வேண்டிய அவசியமில்லையென சலுகையைப் பெற்ருர்கள். இதனுல் பல குடும்பங்களுக்கு நன்மை. இந்த அசோஸியேஷனு'க்காக வசூல் செய்த துகையில் மீதம் இருந்த பணம் பாங்குகளில் இருந்ததற்குரிய Pass book, Cheque book, வகையருவை, சிதம்பரம் செட்டியார் காலமான பிறகு, ஷி! குழுவின் காரியதரிசி. சு சோம. சோமசுந்தரம்செட்டி.யாரிடம், சிதம்பரம் செட்டியாருடைய குமாரர், முத்துராமன் செட்டியார் ஒப்புவித்து விட்டார்.

11 பல குடும்பங்களில் உள்ள நகைகள், பத்திரங்கள் சில பஞ்சாயத்துத் தீர்ப்புக்கள் முதலியவை மெ. செ. ச. சிதம்பரம் செட்டியாரிடம். பாதுகாப்புக்காக ஒப்புவிக்கப்பட்டு, அவர்களிடம் இருந்து வந்தன. சிதம்பரம் செட்டியார் காலமான பின்பு அவைகள் அனைத்தும் உரியவர்களிடம், முத்துராமன் செட்டியார் ஒப்படைத்து விட்டார்.

12 அந்தக் காலத்தில். சாதாரண குடும்பத்தில் உள்ளவர்கள் நடுத்தரக் குடும்பத்தில் உள்ளவர்கள் அவரவர் பணங்களை, வெளிநாட்டில் லேவாதேவி செய்யும் நகரத்தார்கள் கடையில்

வட்டிக்குக் கொடுத்து வைப்பது வழக்கம். அவர வர்களுக்குத் தேவையுள்ள போது வாங்கிக் கொள் வார்கள். அந்த மாதிரி 'ரெங்கூன்', காஞ்சிட் டான்' கடைகளில், பெரும்பாலான தாயபிள்ளை கள், பங்காளிகள், நண்பர்கள் பணங்களும் மற்ற வர்களின் பணங்களும் மெ. செ. ச. கடையில் வர வாக இருந்தன. பிறகு பர்மாவில் இருந்து பணம் வருவதற்குக் கட்டுப்பாடுகள் ஏற்பட்டு, பர்மாவில் இருந்து பணம் தருவிக்க முடியாத நிலை ஏற்பட்ட போது, சிதம்பரம் செட்டியார், அவர்களுடைய 'ஈப்போ' மெ. செ. ச. கடையிலிருந்து சொத்துக் களை விற்றுப்பணங்களை வருத்தி, பர்மா செல்லுக்கு வட்டம் ஏதும் கழிக்காமலும், பர்மாசட்டப்படி வட்டிஏதும் தள்ளுபடி செய்யாமலும் முழுமையாக கொடுத்து வந்தார்கள். சிதம்பரம்செட்டியாருக்குப் பிற்காலம், பாக்கி இருந்த, பர்மா செல்களையும். அவரின் சகோதரர், மெய்யப்ப செட்டியாரும், சிதம்பரம் செட்டியாரின் மகன் முத்துராமன் செட்டி யாரும் முன்பு கொடுத்தபடியே வட்டம் ஏதும் கழிக் காமலும், முழுமையாக வட்டியுடனும் கொடுத்து விட்டார்கள். நகரத்தார்களில் பலபேர், இம்மாதிரி செல்களுக்கு, 20 முதல் 35 பர்செண்ட் என்று வட் டம் கழித்துக் கொண்டு கொடுத்தார்கள் என்பது குறிப்பிடத் தக்கது.

13 இந்தக் காலத்தில் பல நீதிமன்றங்களில், பல வழக்குகள் தீர்ப்புச் சொல்லப்படாமலும், விசாரணை செய்யப்படாமலும், பல வருஷங்களாக முடங்கிக் கிடப்பதும், பலகுடும்பங்கள் நல்ல தீர்ப்புக் கிடைக் காமலும், நஷ்டப்பட்டுப் போவதையும் கஷ்டப் படுவதையும் நாம் அறிவோம். இதனால் வழக் கறிஞர்கள், நடுத்தரகர்கள் ஆகியோருக்கு நல்ல வருமானம் கிடைத்தும், பயன் பெறவேண்டியவர் கள் தீர்ப்புத் தாமதிக்கப்படுவதால் பல கஷ்ட, நஷ்டங்களுக்கு ஆளாகி விடுகிறார்கள்.

நகரத்தார் குடும்பங்களில், 'பஞ்சாயத்து முறை' இருந்து வந்தது, அனைவரும் அறிந்ததே. மெ.செ.ச. சிதம்பரம் செட்டியார் நகரத்தார் குடும்பங்களுக்குள் ஏற்பட்ட தகராறில் 100க்குமேற்பட்ட வழக்குகள் தனித்தும், மற்ற பிரமுகர்களுடன் சேர்ந்தும், பிணக்குகள் உள்ள இருதரப்பினர் கணக்குகளைப் பார்த்தும், வாதங்களைக் கேட்டும், நல்ல தீர்ப்புக்கள் பல வழங்கியிருக்கிறார்கள். நகரத்தார் குடும்பங்கள் உள்ள பல பகுதிகளில் இருந்தும், வந்து இவர்களைக் கூட்டிப் போவார்கள். இம்மாதிரியான பஞ்சாயத்துக்களில், தேவகோட்டை: அள. சுப. பழ. சுப்பிரமணியன் செட்டியார், கரு. கி. சொர்ணநாதன் செட்டியார், அரியக்குடி வயி. ராம. கிருஷ்ணன் செட்டியார், காரைக்குடி ராம. ப. மெ. சொக்கலிங்கம் செட்டியார் போன்ற பலர் ஈடுபடுவதுண்டு. அதில் குறிப்பிடத் தக்கவர், மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார் என்று எல்லோரும் சொல்வார்கள். இம்மாதிரியான பஞ்சாயத்துகளுக்குப் போனால், இரவு பகல் என்று பாராமலும் நேரம் கடந்த நேரங்களில் ஆகாரம் உட்கொண்டும் பஞ்சாயத்தை முடிப்பதிலேயே குறியாய் இருப்பார்கள். பஞ்சாயத்துக்குப் போகுமிடங்களில், சிலநாட்கள் தொடர்ந்து தங்கி விடுவதுமுண்டு. இது ஒரு தன்னலமற்ற சேவை.

இம்மாதிரியான பஞ்சாயத்துக்களால் பொருளாலும், காலத்தாலும், பயன் பெற்ற குடும்பங்கள் பல. இவர்களுடைய தீர்ப்புக்களையும், முடிவுகளையும், பல வழக்கு மன்றங்களில் புகழ்ந்திருக்கிறார்கள் இம்மாதிரிப் பஞ்சாயத்துகளுக்கு, எவரும் பிரதி உபகாரம் அடைவதில்லை. அதற்கு மாறாக, அவர்களுடைய சொந்த அலுவல்களையும், உடல் நலத்தையும் பொருட்படுத்தாமல், கக்ஷிக்காரர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயல்படுவார்கள். இந்தக் காலத்தில், பண பலத்தாலும், சிபாரிசுகளாலும், மற்ற முறைகளாலும்

நியாயம் வழங்கப்படுவது, கண்கூடாகத் தெரிந்த விஷயம்.

திருப்பூட்டுதல் :-

14 நகரத்தார் சமூகத்தில் அந்தக் காலத்தில் பாலிய விவாகம் ரொம்பச் சாதாரணமாக நடந்து வந்தது. மணமகள் அநேகமாய் மணமகனைப் பார்க்காமலேயே, பெற்றோர்களால் நிச்சயிக்கிறபடி திருமணங்கள் நடக்கும். மணமகன் சிறுபிள்ளையாக இருப்பதால், மணமகளுக்குத் தாலி அணிவிப்பது, கழுத்துரு அணிவிப்பது, கோவில்மாலை, மணமாலை அணிவிப்பது போன்ற நடைமுறைகள் மணமகனுக்குத் தெரியாது. அதனால் பஞ்சாங்கக்காரர்களைக கொண்டு, திருமாங்கல்யம், கழுத்துரு இரண்டுக்கும் வைதீக முறைப்படி மணமகனை மணமகன் வீட்டில் பூஜை செய்யச் செய்து, அதை நகரத்தார் சமூகத்தில் ஒரு பெரியவரிடம் ஒப்புவிப்பார்கள். அவர் ஓரளவு செல்வந்தராகவும், பேரன் பேத்தி எடுத்து, எல்லா நலன்களையும் பெற்றவராயும், வயதில் முதிர்ந்தவராயும் இருப்பார்கள். மணமகனை, மணமகன் வீட்டிலேயே விட்டு விட்டு, மணமகனின் பெற்றோர்கள், பங்காளிகள், உற்றார் உறவினர்களுடன், மேளதாளத்துடன் பெண் வீட்டுக்குச் சென்று மணமகளை மேடையில் நிறுத்தி மணமகன் சார்பில், ''திருப்பூட்டுகிறவர்'' மணப்பெண்ணுக்கு, கோவில்மாலை, கழுத்துரு, திருமாங்கல்யம்,மணமாலை முதலியவற்றை அணிவித்து திருமாங்கல்யத்துக்கு மஞ்சள் குங்குமம் வைத்து ஆசீர்வாதம் செய்வது வழக்கம். அதன் பின்னரே மணமகன் குதிரையில் எறி, மணமகள் வீட்டுக்குச் சென்று, மணவரைச் சடங்குகளை, முறையாகப் பஞ்சாங்கக்காரரை வைத்து ஹோமம் செய்வது வழக்கம். அதுசமயம்தான் அங்கு குழுமியிருக்கும்

பெரியோர்கள் 'அரிமணம்' செய்து 'பூமணம்' இட்டு, ஆசீர்வதிப்பதும் வழக்கம். நாகரீக முன்னேற்றத்தாலும், தற்காலம் மணமக்கள் வயது வந்தவர்களாக இருப்பதாலும், பெரியவர்கள் திருப்பூட்டும்முறை நின்று விட்டது.

மெ. செ. ச. சிதம்பரம் செட்டியார் நூறுக்கும் மேற்பட்ட மணமகள்களுக்குத் திருப்பூட்டி, மணமக்களை ஆசீர்வதித்திருக்கிறார்கள். இவர்கள் திருப்பூட்டியதைப் பலர் இன்றும் பெருமையாகவும், கைராசியாகவும் எண்ணி மகிழ்கிறார்கள்.

திருமாத்தாள் சுவாமி வீடு ;-

15 திருமாத்தாள் சுவாமி படைப்புவீடு என்று அழைக்கப்பட்ட, காரைக்குடி, ஓ. சிறுவயல், விராமதி, ஷண்முகநாதபுரம் நகரத்தார்களில், பல ஒக்கூர் பிரிவு நகரத்தார்கள் கூடி, ஆண்டுதோறும் திருமாத்தாளை வழிபடும் கோவில் வீடு காரைக்குடியில் இருந்து வருகிறது. இதன் நிர்வாகத்தை சிதம்பரம் செட்டியார் கவனித்து வந்தார்கள். வழிபடும் வீடு ரொம்பப்பழுதடைந்து விட்டதால் வழிபாடு செய்யும் நகரத்தார்களிடம் புள்ளிவரி போட்டும், ஆஸ்த்திவரி எழுதியும் பணம் வசூலித்து பழையகட்டிடத்தை இடித்துவிட்டுப் புதிய கட்டிடம் கட்டினார்கள். அந்தப் படைப்பு வழிபாட்டுக்குரிய விபரங்கள் கொண்ட ஏடுகள் பழைய கணக்குகள், கட்டிடக்கணக்கு அனைத்தையும், 'பாதுகாப்பாக வைத்திருந்ததால் பிற்காலம் 35 வருஷம் படைப்பு நடைபெறாமல் இருந்து படைப்புத் தொடங்கிய பொழுது பழைய விபரங்களைப் பார்த்து, படைப்பு முறைப்படி நடத்துவதற்குச் சௌகர்யமாய் இருந்தது. பிறகு, மேற்படி கணக்குகள், இருப்பு வகையறாக்கள், படைப்பு அலங்கார

நகைகள், வெள்ளிச் சாமான்கள் ஆகியவற்றை யெல்லாம் சித. முத்துராமனும் மெ. முத்துராமனும் காரைக்குடியில் வகைக்கு ஒருவர் என்று தேர்ந் தெடுத்து அவர்களிடம் ஒப்புவித்து விட்டார்கள்.

குன்றக்குடி ஷண்முகநாதன் நித்தியப்படி ஷண்முக அர்ச்சனை:-

16 குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள அருணகிரிநாத ரால் பாடல் பெற்ற ஷண்முக நாதனுக்கு, தினப் படி ஆறுமுகத்துக்கும் அர்ச்சனை நடத்த ஏற்பாடு செய்து, அதாவது ஷண்முகநாதனின் 'ஆறுமுக'த் துக்கும் ஆறு பேர் சகஸ்ர நாம அர்ச்சனை வாய் மொழியாய் ஓதி, 6பேர் அதேசமயம் வில்வத்தால் அர்ச்சனை செய்து, விசேஷ நிவேத்தியங்களுடன் ஆறுமுகத்துக்கும் 6பேர் தீப ஆராதனை செய்வது என்ற முறைப்படி ஷண்முக அர்ச்சனை செய்ய ஏற்பாடு செய்தார்கள்.

சித்திரை மாதம் முழுவதும் மெ. செ. மெ. மெ. வீடும், வைகாசி முதல் 15 நாட்கள் மெ. செ. ச. வீடும், பின் 15 நாட்கள் மெ. செ. மெ. செ. ராம. வீடும், மேற் குறிப்பிட்ட முறைப்படி, அவரவர்கள் சிலவில் நடத்திவந்ததுடன், இதற்காக ஒரு கணக்கப்பிள்ளையை நியமித்து, மீதமுள்ள பத்து மாதங்களுக்கும், மற்றவர் களை ஏற்பாடு செய்து, ஆண்டு முழுவதும் 'நித்தியப்படி ஷண்முக அர்ச்சனை' செய்ய ஏற்பாடு செய்தார்கள். இந்தத்திட்டம் பலகாலம் நடைபெற்று வந்து, பிறகு பல காரணங்களால் நின்று விட்டது.

சிதம்பரம் செட்டியாரின் குணாதிசயங்கள் :-

சிதம்பரம் செட்டியார் மிகவும் நேர்மையானவர்; கண்டிப்பானவர்; பாரபக்ஷமில்லாது நடந்து கொண்ட வர். சில சமயங்களில் கோபம் வருவதுமுண்டு.

ஆனால், அதனால் நிதானம் இழக்காதவர். சுயநலம் பாராட்டாதவர். பிறர் நலம் பேணிச்செயல்பட்டவர்' எந்தச் செயலுக்கும் பிரதிபலனை எதிர் பார்க்காதவர். அவருக்கு விரோதிகள் என்று யாரும் இருந்ததில்லை. பஞ்சாயத்துக்களில், தாம் பாதிக்கப்பட்டதாக நினைப் பவர்கள், பங்காளிகளில், தாயபிள்ளைகளில் மனவருத் தம் அடைந்தவர்கள் சிலர் அவரைப் பற்றி அவதூரா கப் பேசுவதுமுண்டு. அதை அவர்கள் பொருட்படுத்துவ தில்லை. அப்படிப் பட்டவர்கள் நேரில் வந்தாலும், அவர்களுக்குப் புத்திமதி சொல்லி, கோபத்தையோ, வெறுப்பையோ காட்டாமல் நடந்து கொள்வார்கள்.

மெ. செ. குடும்ப கௌரவத்தை முதன்மையாகக் கருத்திற்கொண்டு எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு செயல்பட்டார்கள். பிறர் பொருளுக்கோ, அல்லது பெயருக்கோ இழுக்கு ஏற்படும் என்று தெரிந் தால் தான் முன்னின்று அதனைத் தடுப்பார்கள்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

என்ற திருக்குறளுக்கு ஏற்ப, நடந்தவர்கள்.

தினமும் நியமப்படி அனுஷ்டானம் செய்து திருநீறு அணிந்து சந்தனப்பொட்டு வைத்து திருமந்திரம் ஓதும் வழக்கத்தில் தவறியதில்லை.

இவ்வாறு வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, உற் றார், உறவினர், ஊராருக்கு தன்னலங் கருதாது உழைத்த இச்சிதம்பரனார் சர்வசித்து கார்த்திகை 18ம் நாள் (3—12—47) மணி விழாக்கண்டு சர்வதாரி புரட்டாசி 10ம் நாள் (25—9–'48) இம்மண்ணுலகில் இருந்து விண்ணுலகு எய்தினார்கள்.

சிதம்பரனாரின் இளைய தலைமுறையினர்

சிதம்பரனார் இயற்கை எய்திய பிறகு அவருடைய தம்பி **மெய்யப்ப செட்டியார்** பொதுக்குடும்பப் பொறுப்புக்களையும் தர்மங்களையும் பார்த்துவந்தார்கள். அவர்கள் எடுத்த அலுவல்களை சுறுசுறுப்போடும் காலம் தாழ்த்தாமலும் செவ்வனே செய்து முடிக்கும் இயல்பினர்.

மு. மெ முத்துராமன் செட்டியார்

சிதம்பரம் செட்டியாரின் சகோதரர் மெய்யப்செட்டியாரின் மகன் மு. மெ. முத்துராமன்செட்டியார் சபாபதி செட்டியாரின் வழிவந்தவர் என்ற முறையில் குடும்பப் பண்புக்கு ஏற்ற வகையில் பல இறை பணிகளிலும் குட முழுக்கு விழாக்களிலும் முன்னின்று பொறுப்பேற்று செவ்வனே பணி செய்து வருகிறார்கள். தற்சமயம் அவரின் உடல் நலக் குறைவையும் பொருட்படுத்தாது பல இறைபணிகளில் முதன்மையாக இருந்து நடத்தி வருகிறார்கள். காரைக்குடி கம்பன் கழகத்தில் கம்பன் அடிப்பொடி காலத்தில் ஈடுபட்டு, கம்பன் அடிப்பொடி மறைவுக்குப்பின் அக்கழகப் பொருப்பேற்று சிறப்பாக நடத்தி வருகிறார்கள்.

சிங்கப்பூர் தெண்டாயுதபாணிகோவில், சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஐயப்பசாமி கோவில், காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர்கோவில் இளையாத்தக்குடிக் கோவில், காரைக்குடி நாகநாதசாமி கோவில் போன்ற பல ஆலயத்திருப்பணி, குடமுழுக்கு விழாக்களில் இரவு பகல் பாராது தொண்டாற்றி இருக்கிறார்கள். மேலும், அக்காலத்தில் சிதம்பரம் செட்டியார் செய்து வந்தது போல, இவர்கள் தம் பங்காளிகள், உறவினர்கள் இல்லங்களில் நடைபெறும் திருமணம் போன்ற எல்லா விசேஷங்களிலும், நன்மை தின்மைகளிலும் முன்நின்று கவனித்து பொறுப்பேற்று செயல்படுகிறார்கள். இன்னும்

மற்ற பொதுப்பணிகளிலும் ஈடுபாடு கொண்டு சிறந்த தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

சிதம்பரம் செட்டியாரின் வாரிசுகள்

சிதம்பரம் செட்டியார் அலமேலு ஆச்சி தம்பதிகளுக்கு மூத்தமகள், உமையாள் 2 வது மகள் சிகப்பி. 3வது முத்துராமன். 4 வது மகள் மெய்யம்மை, ஆக 4 பேர் பிள்ளைகள்.

மூத்தமகள் உமையாளுக்கும் கோட்டையூரில் செட்டிநாட்டின் பிரபலமிக்க பெ. மு. அ. குடும்பத்தில் வெள்ளையன் செட்டியாரின் சுவீகார மகன் சிதம்பரத்துக்கும் ரக்தாக்ஷி வருடம், பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் திருமணம் நடந்தது.

2வது மகள் சிகப்பி திருவாதிரைப் புதுமை செய்து பின்பு நோய்வாய்ப்பட்டு திருமணமாகுமுன் இயற்கை எய்தினாள்.

3வது மகள் மெய்யம்மையைக் கண்டனூரில் மாந்தழை அருணாசல ஐயா குடும்பத்தில் தெ. அரு. சித. கரு. ராமனாதனுக்கு திருமணம் செய்து அவள் கருத்தறித்திருந்தபோது அம்மை நோயால் பீடிக்கப்பட்டு குளிர்ந்து போனாள். இக்கன்னி இன்னும் தெய்வமாய் நிற்கிறாள்.

சிதம்பம் செட்டியாரின் மகன் முத்துராமனுக்கு கோட்டையூர் ப. அரு. நா அருணாசலம் செட்டியார் மகள் வள்ளியம்மையை 8 வயதில் 3-6-1929ல் பால்ய விவாஹம் பல சிறப்பு நிகழ்ச்சிகளுடன் செய்து வைத்தார்கள். திருமணம் ஆன 8வது மாதத்தில் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள கண்மாயில் தண்ணீரில் வள்ளியம்மை விளையாடிக்கொண்டிருந்த போது தண்ணீரில் மூழ்கி மரணம் அடைந்து இக்கன்னி இன்னும் தெய்வமாய்

நிற்கிருள். அதன்பின்பு முத்துராமனுக்குப் பள்ளத்தூரில் சிறப்புமிக்க உ. அ. குடும்பத்தில் உத்தமர் முத்தையா செட்டியார் மகள் வள்ளியம்மையை மறுமணம் செய்து அவளும் அம்மைக்கு இறையானுள்.

முத்துராமனுக்கு 3ம் தாரமாக காரைக்குடியிலும் மற்றும் பல தலங்களிலும் தர்மங்கள் பல செய்திருக்கும் வெ. ராம. குடும்பத்தில் கிருஷ்ணன் செட்டியாரின் மகள் ஏகம்மை என்ற காவேரியை 27—4—1947 ல் திருமணம் செய்தார்கள் அதுவரைப் புத்திரப் பேறு ஏற் படாத குடும்பம் தழைத்தோங்கிப் பல குழந்தைகள் பிறந்து கல்வி கேள்விகளில் சிறந்து பட்டங்கள் பல பெற்று சிறப்புற இருக்கிருர்கள்.

சிதம்பரம் செட்டியார் மறுமணம்

சிதம்பரம் செட்டியாரின் முதல் மனைவி திடீர் நோய்வாய்பட்டு 1940ல் காலமாகிவிட்டார்கள். அதன் பின் சிதம்பரம் செட்டியார் மறுதாரமாக விசாலாட்சி ஆச்சியை மணந்து கொண்டு அலமேலு, சரஸ்வதி என்ற பார்வதி, தெய்வானை ஆகிய 3 பெண்களுக்குத் தகப்பனுர் ஆனுர்கள். செல்வி அலமேலுவை ராம. மு. நா. ராம, ராமசாமி செட்டியார் மகன் முத்தையா வுக்கும், பார்வதியைப்பள்ளத்தூர் S,S.சுப்பிரமணியன் செட்டியார் மகன் சோலையப்ப செட்டியாருக்கும், (Reserve Bank of India) 3வது மகள் தெய்வானையை அ. மு. க. மு. சித. முத்துக்கருப்பன் செட்டியார் மகன் சிதம்பரம் செட்டியாருக்கும் திருமணம் செய்து மக்கள் பேற்றுடன் சிறப்பாய் வாழ்ந்து வருகிருர்ள்.

சிதம்பரம் செட்டியாரின் பேரன்கள்

சிதம்பரம் செட்டியாரின் முதல் பேரனும் முத்து ராமனின் மகனுமான M. **வள்ளியப்பன்** இளமை யிலேயே சூடிக்கையாக வளர்ந்து சென்னை சாந்தோம்

கான்வென்ட், விவேகானந்தா கல்லூரியில் பயின்று தேர்ச்சி பெற்று சின்டிகேட் வங்கியில் பணியாற்றி வங்கியின் மேல் அதிகாரிகளுக்கு பல Suggestion,களை தெரிவித்து மேல் அதிகாரிகளின் பாராட்டும் நன்மதிப்பும் பெற்று வங்கியின் வளர்ச்சிக்கு உதவினர். அத்துடன் குடும்பத்திலும், தொழிலும் ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கினர். அவர் வங்கியில், பதவி உயர்வு உத்தரவு பெற்ற சமயம், நோய்வாய்பட்டு சிகிச்சை பலனின்றி 1979 ஜனவரி 16ம் தேதி எதிர்பாராமல் காலமான பொழுது உற்ருர், உறவினர், நண்பர்கள் பலரும் மீளாத் துயரில் ஆழ்ந்தனர்.

சிதம்பரம் செட்டியாரின் 2வது பேரனும் முத்துராமனின் மகனுமான JC. H. G. F., **சிதம்பரமும்** சென்னையில் பயின்று சின்டிகேட் வங்கியில் சேர்ந்து வாடிக்கையாளர்கள், வங்கி மேலதிகாரிகளுடன், இனிமையாகப் பழகி பலரின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். அவருடைய நாவன்மையும், எழுத்து வன்மையும் எல்லோரையும் கவரக்கூடியது நகைச் சுவை மிக்கது. இதனைக் கண்ட Indian Junior chamber-ன் பிரபல உறுப்பினர்கள் J. C. Amiruddin [Alphabetics உரிமையாளர் J. C. கிருஷ்ணமூர்த்தி செனெட்டர் துஷார் மேத்தா, செனெட்டர் வல்லபதாஸ் சிதம்பரத்தை Jaycee இயக்கத்தில் பங்குபெறச் செய்து சிதம்பரம் பல சிறப்பானபதவிகளைப் பெறவழி வகுத்தார்கள். அகில உலக பயிற்சியாளராக தேர்ச்சிபெற்று இந்தியன் ஜேஸிசின்சிறந்த பயிற்சியாளராகத் தேர்வு பெற்றார். இன்று அகில இந்திய அளவில் J. C. இயக்கத்தில் '**சிதம்பரம்**' என்று பெயர் சொன்னல் தெரியும் அளவில் தன்னல மற்ற சேவையாலும், சிறந்த பண்பாலும் வளர்ந்தோங்கி நிற்கும் இச் சிதம்பரம், அலமேலு என்ற கோதையைத் திருமணம் செய்து கொள்ளும் இந்நாளில் அவர்தம் ஐயா **சிதம்பரம் செட்டியாரின்** குண நலன்களையும், திறமையை

யும், புகழையும் இளைய தலைமுறையினரும். பிறரும் அறியும் வண்ணமும் எல்லாருக்கும் வழிகாட்டியாகவும் அமையவேண்டும் என்ற நன்நோக்கோடும் இன்று மணிவிழாக் காணும் மணமக்கள் ஆல்போல் தழைத்து அருகுபோல் வேரோடிசுற்றம் முசியாமல் சீரோடும் சிறப்போடும் சிதம்பரஐயாபோல வாழ தில்லை அம்பல நடராஜப் பெருமான் அடிபோற்றி இம்மலரினை வெளி யிடுகிறோம்.